# 2020 ம் ஆண்டு பிப்ரவரி  மாதம் 28 ஆம் தேதி வெள்ளிக் கிழமை காலை 11.00  மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் சாதாரன கூட்ட  நடவடிக்கைகள்.

**முன்னிலை :**
**திரு. சி. பாண்டு,**
**நகராட்சி பொறியாளர் மற்றும்**
**தனி அதிகாரி(பொ),**
**விருத்தாசலம் நகராட்சி.**

<u>பொருள் எண். 1.</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் பேருந்து நிலைய நுழைவுக் கட்டணம் வசூலிக்க பயன்படும் டோக்கன்கள் 1100 (பேருந்து கட்டணம் 75001 முதல் 76000 மற்றும் இரவு டோக்கன் 901 முதல் 1000 வரை) காணாமல் போனதையடுத்து தினத்தந்தி நாளிதழில் அறிவிப்பு கொடுக்கவும் அதற்கான தோராய செலவினம் .. 10000/– மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3769 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 2.</u>

விருத்தாசலம் நகராட்சியில் பொது பிரிவு, பொது சுகாதார பிரிவு, வருவாய் பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் கட்டிட பிரிவில் உள்ள கணினிகளுக்கு BSNL நிறுவனத்தின் தொலைபேசி மூலம் இண்டர்நெட் இணைப்பு வழங்கப்பட்டு உள்ளது. மேற்படி இணைப்பில் அதிகளவு கணிப்பொறி இணைக்கப்பட்டு இணைய வசதி பயன்படுத்தப்படுவதால் வேகம் குறைவாகவும் அடிக்கடி பழுதும் ஏற்படுகிறது. எனவே இதனால் அலுவலகபணி பாதிப்படைகிறது. எனவே தற்போது கூடுதலாக அதிவேக BSNL பைபர் இண்டர்நெட் பெறுவதற்கு BSNL நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற தனியார் நிறுவனமான சந்திரா டி.வி விருத்தாசலம் மூலம் இணைய வசதி பெறுவதற்கும், அதற்கு முன் வைப்புத் தொகை மற்றும் Device பெறுவதற்கு ஏற்படும் செலவினத் தொகை ரூ. 4500/– க்கும் மற்றும் மாதந்தோறும் இணைய கட்டணம் ரூ. 1600/– வீதம் சந்திரா டி.வி, விருத்தாசலம் நிறுவனத்திற்கு செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3770 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 3.**

விருத்தாசலம் நகராட்சியில் நடை முறை படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் வாயிலாக நகரில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து பெறவும், திறந்த வெளி கழிப்பிடமற்ற இடமாக முற்றிலுமாக மாற்றிடவும், தனிநபர் கழிவறை கட்டிகொடுக்கப்பட்டுள்ளது. மேலும் நகரில் பிளாஸ்டிக் பயன்பாட்டினை தவிர்க்கும் பொருட்டு ஒரு முறை பயன்படுத்தப்படும் கேரி பேக் போன்றவைகளை தவிர்த்திடவும் நகரின் பிரதான பத்து (10) இடங்களில் நாடக நிகழ்ச்சிகள் வாயிலாக கலை நிகழ்ச்சிகள் நடத்திடவும், அதற்கானதோராய செலவீனம் ரூ.1.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.0426/2020/எச்1

**தீர்மானம் எண். 3771 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 4.**

விருத்தாசலம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு தொடர்ந்து அத்தகைய நிலையை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தற்போது அதற்கடுத்த நிலை ODF+ சான்று பெறுவதற்கு நகராட்சி பல்வேறு முறையில் நடவடிக்கை மேற்க்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக நகராட்சி பகுதிகளில் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலை தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றது. என சுய உறுதி மொழி சான்றிதழுக்கு (Self Declaration) க்கு மன்றத்தின்அனுமதி பெறுவதற்கும், அதன் தொடர்பாக பொதுமக்களிடையே ஆட்சேபனை ஏதேனும் இருப்பில் கருத்து தெரிவித்திடவும் அதனை தினசரி நாளிதழில் செய்தி வெளியிடவும், அதனைதொடர்ந்து பொது இடங்களில் சிறநீர் கழித்தால் ரூ.100/- அபராதமும், திறந்த வெளியில் மலம் கழித்தால் ரூ.200/- அபராதமும் விதித்திடவும், மேற்கண்ட இரண்டு அறிவிக்கையும் தினசரி நாளிதழ்களில் பிரசுரம் செய்திடவும், அதற்கான செலவீனத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.3169/2014/எச்1

**தீர்மானம் எண். 3772 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 5.</u>**

விருத்தாசலம் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் அரசாணை நிலை எண். 77 பள்ளி கல்வி (ப.க 4 (1) துறை நாள் 13.04.2015ன் படி இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள நகராட்சியின் துவக்கப்பள்ளிகள் மற்றும் நடுநிலைப்பள்ளிகள், சமுதாய கழிப்பிடங்கள், பொது கழிப்பிடங்கள் ஆகிய அனைத்து சுபம் கங்கா சேவா சன்ஸ்தான் தொண்டு நிறுவனம் அவர்களின் மூலமாக சுத்தம் செய்யும் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றது. மேலும் தற்சமயம் வார்டு 31ல் உள்ள மேட்டுக்காலனி பகுதியில் உள்ள பொது கழிப்பிடம் சீரமைத்து பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேட்டுக்காலனியில் உள்ள மக்களின் நலன் கருதி மேற்கண்ட நிறுவனத்திடம் ஏற்கனவே குறிட்டுள்ள அதே விகிதத்திலும், நிபந்தனைக்கும் உட்படுத்தி மேட்டுக்காலனி பொது கழிப்பிடத்தை சுத்தம் செய்யும் பராமரிப்பு பணி செய்திட ஆணையர்(பொ)மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி அளித்தன் பேரில் மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதற்கும், அதற்கான செலவீனத்திற்கும் மன்றத்தின் வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பொது சுகாதாரம் நலன் கருதி பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 4994/2017/எச்1

**தீர்மானம் எண். 3773 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 6.</u>**

VSS & Co, 68-B, OPR பிளாட், வடலூர் நிறுவனம் அவர்கள் தங்கள் நிறுவனத்தை விருத்தாசலம் நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய வேண்டி சொத்து மதிப்பு சான்றிதழ் (ரூ. 35.00 இலட்சம்), வில்லங்க சான்று மற்றும் இதர ஆவணங்களுடன் விண்ணப்பித்துள்ளார். எனவே மேற்படி நிறுவனத்தை இந்நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண். 1068/2020/இ1

**தீர்மானம் எண். 3774 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 7.</u>**

விருத்தாசலம் நகராட்சி பொறியியல் பிரிவில் தற்போது போதிய தொழில்நுட்ப அலுவலர் இல்லாத காரணத்தால் அரசு திட்டப் பணிகள், பொது நிதி பணிகள் மற்றும் குடிநீர் பணிகளை பார்வையிடுவதற்கு இரண்டு தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் ஒரு தொழில்நுட்பம் அல்லாத உதவியாளர் ஆகியோர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்கள் விலை விகிதத்தின்படி ஒப்பந்ததாரர் மூலம் தற்போது தற்காலிகமாக பணிபுரிந்து வருகின்றனர். தற்போது இந்நகராட்சியில் புதியதாக தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2019–20 ன் கீழ் 22 பணிகள் மற்றும் 14வது மான்ய நிதிக்குழு திட்டத்தின் கீழ் 12 பணிகள் மற்றும் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி, அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கும் பணி போன்ற அனைத்து பணிகளும் நடைபெற்று வருவதால் மேற்படி பணிகளை பார்வையிடுவதற்கு கூடுதலாக ஒரு தொழில்நுட்ப உதவியாளர் அவர்களை ராசி அண் கோ, விருத்தாசலம் நிறுவனம் மூலம் தற்காலிகமாக

மாவட்ட ஆட்சியர் அவர்களின் விலைவிகிதத்தில் அமர்த்தி கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3775 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 8.**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 26982/17/WB, நாள். 19.02.2020ல் Safe Water Supply and Sanitation என்ற ஆணையாளருக்கான பயிற்சி தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூரில் நடைபெறவுள்ளதாகவும் மேற்படி பயிற்சியில் தவறாது கலந்துகொள்ளவேண்டும் என தெரிவித்ததற்கிணங்கக மேற்படி பயிற்சியில் திரு. எல். ரவிச்சந்திரன், உதவிபொறியாளர் கலந்து கொள்வதால் பயிற்சி கட்டணம் ரூ. 3000/– ஐ மேற்படி பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3776 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 9.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 1,00,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 6 பாலக்கரை பேருந்து நிலைய நிழற்குடையில் இருக்கை அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3424,நாள்.31.05.2019ல் அனுமதியளித்தற்கிணங்க 13.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திருமதி.கே.சாந்தி,<br>ஒப்பந்ததாரர் | (-) 0.05 % குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன்,<br>ஒப்பந்ததாரர் | (+) 0.10 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.05 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2378 /19/இ1)

**தீர்மானம் எண். 3777 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 10.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 8,60,000/— மதிப்பீட்டில் வார்டு எண் 2 ஓம்சக்தி கோவில் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3719,நாள்.03.01.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 13.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஏ.மதியழகன்,<br>ஒப்பந்ததாரர் | (-) 0.03 % குறைவு |
| 2. | திரு.வி.பழனிசாமி,<br>ஒப்பந்ததாரர் | (+) 0.09 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.ஏ.மதியழகன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.03 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2378 /19/இ1)

**தீர்மானம் எண். 3778 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 11.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 5,70,000/— மதிப்பீட்டில் வார்டு எண் 16 முத்து வள்ளல் திருமண மண்டப தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3717,நாள்.03.01.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 13.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஏ.மதியழகன்,<br>ஒப்பந்ததாரர் | (-) 0.02 % குறைவு |
| 2. | திரு.வி.பழனிசாமி,<br>ஒப்பந்ததாரர் | (+) 0.07 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.ஏ.மதியழகன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.02 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2378 /19/இ1)

**தீர்மானம் எண். 3779 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 12.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 5,60,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 28 மணலூர் அய்யனார் கோவில் தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3718,நாள்.03.01.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 13.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஏ.மதியழகன்,<br>ஒப்பந்ததாரர் | (-) 0.02 % குறைவு |
| 2. | திரு.வி.பழனிசாமி,<br>ஒப்பந்ததாரர் | (+) 0.08 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.ஏ.மதியழகன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.02 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2378 /19/இ1)

**தீர்மானம் எண். 3780 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 13.**

விருத்தாசலம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் ரூ. 2,00,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 1 வயலூர் காலணியில் புதிய பம்பு ரூம் கட்டும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3417,நாள்.31.05.2019ல் அனுமதியளித்தற்கிணங்க 13.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஏ.மதியழகன்,<br>ஒப்பந்ததாரர் | (-) 0.08 % குறைவு |
| 2. | ராசி அண் கோ,<br>ஒப்பந்ததாரர் | (+) 0.22 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.ஏ.மதியழகன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.08 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2378 /19/இ1)

**தீர்மானம் எண். 3781 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 14.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 6,50,000/— மதிப்பீட்டில் வார்டு எண் 13 அண்ணா நகர் சேக்கிழார் தெரு மேற்கு பகுதியில் சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3763 , நாள்.31.01.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 21.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஏ.மதியழகன்,<br>ஒப்பந்ததாரர் | (-) 0.05 % குறைவு |
| 2. | ராசி அண் கோ,<br>ஒப்பந்ததாரர் | (+) 0.04 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.ஏ.மதியழகன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.05 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 315 /2020/இ1)

**தீர்மானம் எண். 3782 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 15.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 8,60,000/— மதிப்பீட்டில் வார்டு எண் 13 அண்ணா நகர் சேக்கிழார் தெரு கிழக்கு பகுதியில் சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3764 , நாள்.31.01.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 21.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஏ.மதியழகன், ஒப்பந்ததாரர் | (-) 0.03 % குறைவு |
| 2. | ராசி அண் கோ, ஒப்பந்ததாரர் | (+) 0.04 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.ஏ.மதியழகன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.03 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 315 /2020/இ1)

**தீர்மானம் எண். 3783 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 16.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 4,10,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 16 தெற்கு பெரியார் நகர் திருவள்ளுவர் 4வது தெரு பகுதியில் சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3765,நாள்.31.05.2019ல் அனுமதியளித்தற்கிணங்க 21.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர் | (-) 0.02 % குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர் | (+) 0.13 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.02 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 315 /2020/இ1)

**தீர்மானம் எண். 3784 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 17.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 1,10,000/– மதிப்பீட்டில் விருத்தாசலம் நகராட்சியில் 2 கணிணிகள் மற்றும் பொது பிரிவில் உள்ள 3 கணிணிகளுக்கு 5 எண்ணிக்கை UPS மற்றும் அலுவலக பிரிண்டர்களுக்கு தேவையான 15 டோனர்கள் மற்றும் பழைய பிரிண்டர்கள் சர்வீஸ் செய்யும் பணி மற்றும் அலுவலக நெட்வொர்க் கேபிள் மாற்றி அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3766, நாள்.31.05.2019ல் அனுமதியளித்தற்கிணங்க 21.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | Printer Care,<br>28/75,Bunglow street,<br>Vriddhachalam. | (-) 0.15 % குறைவு |
| 2. | S.M.T Infotech,<br>36,Pudupet,<br>Vriddhachalam. | (+) 1.56 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் Printer Care,28/75,Bunglow street,Vriddhachalam நிறுவனம் அளித்துள்ள 0.15 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 315 /2020/இ1)

**தீர்மானம் எண். 3785 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 18.**

விருத்தாசலம் நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் எண்.TN 31 AL 1126 வாகனம் வரி வசூல் பணிக்காக உடன் தேவைப்படுவதால் மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கும் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் திரு.சி.பாண்டு ,பொறியாளர் அவர்களால் பழுதுநீக்கம் பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு பட்டியல் தொகை ரூ.6600/– அன்னாருக்கு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 3786 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 19.**

விருத்தாசலம் நகராட்சியில் 14வது நிதிக்குழு திட்டம் 2019–2020ன் கீழ் தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு உடன் திட்ட மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர்,செங்கல்பட்டு அவர்களுக்கு தொழில்நுட்ப அனுமதி பெற தெரிவித்ததின் அடிப்படையில் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் திரு.சி.பாண்டு ,பொறியாளர் அவர்களால் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு பட்டியல் தொகை ரூ.24426/– அன்னாருக்கு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 3787 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 20.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் .33 சித்தலூர் பெண்ணாடம் மெயின் ரோடு பகிர்மான குழாய் அமைக்கும் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் .33 சித்தலூர் பெண்ணாடம் மெயின் ரோடு பகிர்மான குழாய் அமைக்கும் பணி. | திரு.கே.சிவகுருநாதன் | 65000/– |

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 3788 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 21.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13 தினசரி காய்கறி மார்கெட்டில் உள்ள கழிவறை முன்புறம் மேற்கூரை அமைக்கும் பணி யின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் 13 தினசரி காய்கறி மார்கெட்டில் உள்ள கழிவறை முன்புறம் மேற்கூரை அமைக்கும் பணி. | திரு.டி.அய்யப்பன் | 150000/– |

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 3789 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 22.**

விருத்தாசலம் நகராட்சியில் புதியதாக வாங்கப்பட்ட 27 எண்ணிக்கை பேட்டரி ஆப்ரேட்டட் வாகனத்திற்கு Mega phone speaker with clamp சப்ளை செய்யும் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட நிறுவனம் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | விருத்தாசலம் நகராட்சியில் புதியதாக வாங்கப்பட்ட 27 எண்ணிக்கை பேட்டரி ஆப்ரேட்டட் வாகனத்திற்கு Mega phone speaker with clamp சப்ளை செய்யும் பணி. | SHUTTLECARS INDIA PRIVATE LIMITED, #67,2ND Avenue ,Ashok nagar, Chennai-3. | 92000/– |

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 3790 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 23.</u>**

இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் சுற்றித்திரியும் பன்றிகளை உயிருடன் பிடித்து அப்புறப்படுத்திடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி பெற்று (மன்ற தீர்மான எண். 3559 10.09.2019) விலைப்புள்ளி கோரப்பட்டதில் 12.02.2020 அன்று வரப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | எண்ணிக்கை | தொகை ரூ |
|---|---|---|---|
| 1. | திரு. கோவிந்தசாமி த/பெ சுப்ரமணியன் , நடுத்தெரு, குறிஞ்சிபாடி. | ஒன்று | 110/- |
| 2. | திரு.பெருமாள் த/பெ பரமு, 23/24, கிழக்குத்தெரு, வேப்பூர் | ஒன்று | 105/- |
| 3. | திரு. சின்னமணி, த/பெ ராமமூர்த்தி, மணவாள நல்லூர், விருத்தாசலம் | ஒன்று | 100/- |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3 ல் காணும் ஆர். சின்னமணி த/பெ ராமமூர்த்தி, மணவாளநல்லூர், விருத்தாசலம். அவர்கள் அளித்துள்ள குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம். மேலும் பொது சுகாதாரம் நலன் கருதியும், பொது மக்கள் நலன் கருதியும் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு. சின்னமணி த/பெ ராமமூர்த்தி அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.7581/2015/எச்1,

**தீர்மானம் எண். 3791 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 24.</u>**

இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.06.2015ல் பணி ஓய்வு பெற்ற திரு, கே. ரத்தினம் த/பெ கேசவன் துப்புரவு பணியாளர் (ஓய்வு) அவர்கள் ஓய்வூதியம் வழங்கக்கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். (W.P.No.21045 of 2019)ல் தொடரப்பட்டுள்ளதை தொலைபேசியில் தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அவ்வழக்கு தொடர்பாக இந்நகராட்சியின் சார்பாக வழங்கறிஞர் திரு. ஆர்.பி. பிரதாப் சிங், அரசு வழக்கறிஞர், உயர்நீதி மன்றம், சென்னை அவர்கள் வழக்கினை நடத்தியதற்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10000/— வழங்கக் கோரி கடிதம் அனுப்பியுள்ளார். எனவே மேற்படி வழங்கறிஞர் கட்டணம் ரூ10000/—வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 9596/2008/சி1

**தீர்மானம் எண். 3792 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 25.</u>**

விருத்தாசலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் BOV வாகனம் எண். 2 மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து வார்டுகளில் பெறப்பட்டு OCC க்கு செல்லும் வழியில் நடு ரோட்டில் நின்று விட்டது. மேற்படி வாகனத்தினை உடனடியாக மெக்கானிக்கை அழைத்து பழுதுகளை சரிசெய்து அலுவவகம் எடுத்து வரப்பட்டது. எனவே பொது சுகாதாரம் நலன் கருதி வாகனத்தினை உடனடியாக சரி செய்யப்பட்டு ரூ. 1150/- செலவீனம் வாகனம் பொருப்பு துப்புரவு பணியாளரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொது சுகாதாரம் நலன் கருதி BOV சரிசெய்ய மேற்கொண்ட ரூ.1150/- தொகையாக வழங்கிடவும், மற்றும் பொது சுகாதார பிரிவு வாகனம் JCB TN-31-AZ-4145 பக்கெட் ஆயில் செல்லும் குழாய் வெடித்து சேதம் அடைந்துள்ளதால் வாகனத்தினை இயக்க சிரமமாக உள்ளது. எனவே பொது சுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதி DYNATECH நிறுவனத்தில் பக்கெட் குழாய் வாங்கப்பட்டு மாற்றப்பட்டுள்ளது. அதற்கான ரூ. 3687/- செலவினத் தொகை ஓட்டுனர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.5975/2020/எச்1

**தீர்மானம் எண். 3793 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 26.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் TN-31-AL-1127 எணணுள்ள டாடா AC வாகனத்தில் சென்சார் பழுது அடைந்து உள்ளது எனவும் , இதனால் வாகனத்தை தள்ளி தள்ளி இயக்கி வருவதால் வாகனம் அதிக அளவில் பழுதடைய வாய்ப்புள்ளதால் எனவும் அதனை சரி செய்து தருமாறு வாகனத்தின் ஒட்டுனர் குறிப்பு தந்துள்ளார். அதன் பேரில் துப்புரவு ஆய்வர் மற்றும் துப்புரவு அலுவர் அவர்கள் அளித்துள்ள பணித்துறையினை ஏற்று பொது சுகாதாரம் நலன் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான VST SERVICESTATION. CUDDALORE . நிறுவனத்திற்கு எடுத்து சென்று வாகனத்தினை நேராய்வு செய்து நேரடி விலைவிவரப்பட்டியல் பெற்று, மேற்கண்ட வாகனத்தினை பழுதுகளை சரிசெய்ய ஆகும் தோராய செலவீனம் ரூ.20250 /- ( ரூபாய் இருபதாயிரத்து இருநூற்றி ஐம்பது மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.0662/2020/எச்1

**தீர்மானம் எண். 3794 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 27.</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 30322/2012/இ3, நாள். 15.02.2020 ல் நகராட்சி நிர்வாக ஆணையரக கட்டிடம் கட்டப்பட்டதற்கான பங்களிப்பு தொகையாக முதல் நிலை நகராட்சியான இந்நகராட்சி செலுத்தவேண்டிய 4வது தவணைத் தொகை ரூ. 3,00,000/– செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ. 3,00,000/– இலட்சத்தை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

கோப்பு எண்.1925/2016/சி1

**தீர்மானம் எண். 3795 நாள். 28.02.2020.**
**<u>அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண். 28.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட மணலூர் கிராமம் வார்டு–B, பிளாக்–1, நகர.ச.எண் 16/1,2,3pt,4pt,5pt,8,9pt,31/2pt,சர்வே எண். 16,31/1 ல் 3.10 ஏக்கர் அல்லது 135036.00 சதுர அடி பரப்பளவு கொண்ட "ஸ்ரீ ரயில் நகர் விரிவாக்கம்" மனைப்பிரிவிற்கு அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை (UD(3) துறை, நாள். 04.05.2017 மற்றும் அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும் /நகர்புற வளர்ச்சி துறை (U(3) துறை, நாள். 13.10.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2அவர்களின் செயல்முறை வழிகாட்டுதல் (Operational Guideliness) ந.க.எண். 13193/2017/எல்.ஏ2, நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017, மற்றும் அரசாணை எண். 21, வீட்டு வசதி மற்றும் /நகர்புற வளர்ச்சி துறை (U(3) துறை, நாள். 05.02.2019 ன்படி மேற்படி மனைபிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம் மண்டலம் அவர்கள் கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (வி.ம) எண். R862/2019 என எண்ணிட்டு நாள். 22.11.2019ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மனைபிரிவு உரிமையாளரான திரு. R கார்த்திகேயன் மற்றும் ஒருவர் என்பவர் மேற்படி மனைபிரிவில் ஒதுக்கப்பட்ட பூங்கா –8918.00 ச.அடி மற்றும் சாலைகள் ஆகிய பொது உபயோக இடங்களை தானப்பத்திர எண். 57, நாள். 08.1.2020ன் மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார். எனவே மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் பூங்கா ஆகிய பொது உபயோக இடங்களை மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களை மனுதாரர் தானப்பத்திரத்தின் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளதால் மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.6243/2019/எப்1)

**தீர்மானம் எண். 3796 நாள். 28.02.2020.**

**<u>அனுமதிக்கப்பட்டது</u>**

**பொருள் எண். 29.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 தெற்கு பெரியார் நகர் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் வளாகம் மராமத்து பணி செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7,50,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3797 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 30.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 வடக்கு பெரியார் நகர் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் வளாகம் மராமத்து பணி செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7,50,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3798 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 31.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10 காமராஜர் நகர் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் வளாகம் மராமத்து பணி செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7,50,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3799 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 32.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 6 ஜங்ஷன் ரோடு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் வளாகம் மராமத்து பணி செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7,50,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3800 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 33.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19 தெற்கு தெரு , வார்டு எண் 23 கடைவீதி , வார்டு எண் 24 தென்கேட்டை வீதி , வடக்கோட்டை வீதி , சன்னதி வீதி மற்றும் வார்டு எண் 32 பெண்ணாடம் சாலை போன்ற பகுதிகளில் உள்ள 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகளை மின்சார சிக்கனம் கருதி 70 அல்லது 100 வாட்ஸ் எல்.டி.இ விளக்குகளாக மாற்றி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9,95,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3801 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 34.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2,3 மற்றும் 6 உளுந்தூர்பேட்டை ரோடு மற்றும் வார்டு எண் 7 செராமிக் சாலை பகுதிகளில் உள்ள 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகளை மின்சார சிக்கனம் கருதி 70 அல்லது 100 வாட்ஸ் எல்.டி.இ விளக்குகளாக மாற்றி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9,95,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3802 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 35.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 15 மற்றும் 16 கடலூர் ரோடு பகுதிகளில் உள்ள 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகளை மின்சார சிக்கனம் கருதி 70 அல்லது 100 வாட்ஸ் எல்.டி.இ விளக்குகளாக மாற்றி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9,95,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3803 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 36.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 28 சேலம் ரோடு மணலூர் மேம்பாலத்தில் உள்ள 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகளை மின்சார சிக்கனம் கருதி 70 அல்லது 100 வாட்ஸ் எல்.டி.இ விளக்குகளாக மாற்றி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9,95,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3804 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 37.**

விருத்தாசலம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–19ன் கீழ் ரூ48.60 இலட்சம் மதிப்பீட்டில் 27 எண்ணிக்கை Battery Operated vehicle சப்ளை செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய SHUTTLE CARS INDIA PRIVATE LIMITED, CHENNAI நிறுவனம் ஒரு வாகனத்திற்கு ரூ.1,66,770/– என வழங்கியதை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி வாகனத்தில் முன்பக்கம் கூரை (Driver Cabin with rain cover) இல்லாத காரணத்தினால் வாகனத்தை வெயில் மற்றும் மழைகாலங்களில் இயக்குவதற்கு கடினமானதாக இருக்கும் என ஒட்டுனர்கள் தெரிவித்தற்கிணங்க , கூடுதலாக ஒவ்வொரு வாகனத்திற்கும் முன்பக்க கூரை அமைக்க மேற்படி நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டு ஒரு வாகனத்திற்கு கூடுதலாக ரூ.13,230/– ஆகும் என தெரிவிக்கப்பட்டதற்கிணங்க ,மேற்படி நிறுவனத்தின் மூலமே 27 வாகனங்களுக்கும் முன்பக்க கூரை அமைக்கப்பட்டுள்ளது.எனவே,தற்போது 27 வாகனங்களுக்கும் முன்பக்க கூரை அமைக்கப்பட்டுள்ளதால் ஒரு வாகனத்தின் விலை ரூ.1,71,428/– என நிர்யணம் செய்யப்பட்டுள்ளது.எனவே , 27 எண்ணிக்கை பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் வாங்கியதற்கான பட்டியல் தொகை ரூ.48,60,000/– (வரிகளுடன்) SHUTTLE CARS INDIA PRIVATE LIMITED, CHENNAI நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி கூடுதல் செலவினம் மதிப்பீட்டிற்குள்ளே வருவதால் திட்டப்பணியின் அவசரம் அவசியம் கருதி சம்மந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3805 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 38.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 எம்.ஆர்.கே நகரில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி 2019 –2020 ன் கீழ் சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நடைபெற்ற போது அப்பகுதி பொதுமக்கள் மேற்படி பகுதியில் விடுபட்ட பகுதிக்கும் சேர்த்து சிமெண்ட் சாலை அமைத்து தரக் கோரி நேரில் கேட்டுக்கொண்டதற்கிணங்க அப்பகுதியில் விடுப்பட்ட பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3806 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 39.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 32ல் ஆற்றக்கரை படித்துறை உடைந்து சேதமடைந்து உள்ளதால் தற்போது கோயில் திருவிழாவினை முன்னிட்டு உடனடியாக மேற்படி படித்துறையினை சீரமைத்து தரக் கோரி அப்பகுதி பொதுமக்கள் நேரில் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி ஆற்றக்கரை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4,90,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3807 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 40.**

விருத்தாசலம் நகராட்சி வார்டு எண். 3ல் ஜெ.ஜெ. நகரில் Internal Plumping இணைப்பு கொடுப்பதற்கு அப்பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யும் குடிநீர் இணைப்பு குழாய் இல்லாத காரணத்தால் அப்பகுதியில் ஆய்வு செய்து மேற்படி பகுதியில் புதிய பைப்லைன் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 3,30,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3808 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 41.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட மணலூர் கிராமம் சர்வே எண். 24/4 ல் 4.39 ஏக்கர் அல்லது 191228.40 சதுர அடி பரப்பளவு கொண்ட "ஓம் கந்தன் நகர் " மனைப்பிரிவிற்கு அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை (UD(3) துறை, நாள். 04.05.2017 மற்றும் அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும் /நகர்புற வளர்ச்சி துறை (U(3) துறை, நாள். 13.10.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2அவர்களின் செயல்முறை வழிகாட்டுதல் (Operational Guideliness) ந.க.எண். 13193/2017/எல்.ஏ2, நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017,03.01.2019,07.01.2019 மற்றும் அரசாணை எண். 21, வீட்டு வசதி மற்றும் /நகர்புற வளர்ச்சி துறை (U(3) துறை, நாள். 05.02.2019 ன்படி மேற்படி மனைபிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம் மண்டலம் அவர்கள் கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (வி.ம) எண். R677/2019 என எண்ணிட்டு நாள். 22.11.2019ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மனைபிரிவு உரிமையாளரான திரு. S கேசவன் என்பவர் மேற்படி மனைபிரிவில் ஒதுக்கப்பட்ட பூங்கா –9887.06 ச.அடி மற்றும் சாலைகள் ஆகிய பொது உபயோக இடங்களை தானபத்திர எண். 4342, நாள். 20.12.2019 ன் மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார். எனவே மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் பூங்கா ஆகிய பொது உபயோக இடங்களை மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களை மனுதாரர் தானபத்திரத்தின் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளதால் மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.4452/2019/எப்1)

**தீர்மானம் எண். 3809 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 42.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 16 வடக்கு பெரியார் நகர் தீயணைப்பு நிலையம் அருகில் உள்ள நாச்சியார் குளம் ஜல்சக்தி அபியான் திட்ட வழிகாட்டு நெறிமுறையின் கீழ் தனியார் அமைப்பு மூலம் தூர்வாரப்பட்டுள்ளது. தற்போது மேற்படி குளத்தில் பொதுமக்கள் வசதிக்காக அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 995000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3810 நாள். 28.02.2020.**
**அனுமதிக்கப்பட்டது**